உ

கடவுள் துணை.

# யாகோபு அருளிச்செய்த
## வைத்திய
# வாத சூஸ்திரம் சா.

காப்பு.

சீர்பெறவே ஈபிமார்கள் பாதந்தன்னைத்
தெரிசித்து வாதசூஸ்த் திரத்தைச்சொல்ல
பார்புகழு மீசுவின்றன் பாதம்போற்றிப்
பத்தியுட னென்தாயார் பாதம்போற்றி
சேர்பெறவே குருமுனிவர் பாதம்போற்றி
நிறைந்தநந்தி போகரிஷி பாதம்போற்றி
ஏர்பெறவே கொங்கணர்தன் பாதம்போற்றி
இனிமையுள்ள யூகிமுனி பாதங்காப்பே.

காப்பான கணேசனுட பாதங்காப்பு
கருணைதருஞ் சிற்பரையாள் பாதங்காப்பு
தாப்பான குண்டலிசத் தியுமேகாப்பு
தாயான மனோன்மணியாள் பாதங்காப்பு
கோப்பான பரவெளியிற் சார்ந்துநின்று
குறிப்பறிந்த கடவுளர்தன் பாதங்காப்பு
மாப்பான ஈபிமார்கள் பாதங்காப்பு
மகிழ்வாகு மருட்சோதி பாதங்காப்பே.

சோதியெனுங் குருசூஸ்திரந் தன்னைத்தானுஞ்
சொல்லுகிறே னுலகோர்க்கு வெளியதாக
நீதியுடன் நீத்தினத்தைச் சொல்லிவிட்டேன்
நேர்மையுட னிதைத்தெரிந்து செய்வானாகில்
வாதிகளு மிவனாவான் வைத்தியனாவான்
மற்றோர்க்கு மிம்முறையோ வருத்தமில்லை
சேதியாம் நீத்தினத்தின் குருவைக்கேளு
செம்புதொட்டிப் பாஷாணம் அரிதாரந்தானே. (1)

பாஷாணபற்பம்.

சூட்டினேன் வெள்ளைப்பா ஷாணந்தன்னைச்
சுண்ணத்தில் வைத்ததனைக் கள்ளைவார்த்து
ஆட்டியே கொதியிடுவாய் மூன்றுசாமம்
அப்பனே வெண்மைபடா அறிந்துபாரு
காட்டியே மருந்துதனைக் கவசஞ்செய்வாய்
நன்றாகப் பத்துக்கு மூன்றுவீதம்
கூட்டியே மண்சீலை செய்துகொண்டு
கோழியென்ற புடமிடவே நீறும்பாரே. (22)

நீறியதோர் பாஷாணந் தன்னிலப்பா
நிமிஷத்திற் சார்தீரும் பத்தியம்வேண்டாம்
ஆறியதோ ரஸ்திசுரம் இளைப்புத்தீரும்
ஆகாத பவுத்திரங்க ளனைத்தும்போகும்
காறியதோர் புண்களெல்லாந் தீர்ந்துபோகும்
ராச்சுரமும் குளிர்சுரமும் காடசதோஷம்
ஊறியதோ ருடம்பாகு மிதினாலப்பா
ஊட்டியதோர் பச்சையினால் உடல்கெட்டாரே. (23)

கெட்டாரே பிள்ளைபிள்ளை தலைமுறைக்கும்
கேடில்லை யிதுவொரு வழிதானென்பார்
மட்டான கைபாக மூட்டானுக்கு
வகைதெரியா தேயிய்ந்து மாண்டார்பாரு
கெட்டானே தான்கெட்ட கேடுமல்லால்
கெடுத்தானே லோகமெல்லாங் கெடவுந்தானே
துட்டான துட்டனுக்கு நூலீய்ந்தாக்கால்
தோஷமுண்டு பாவம்வருஞ் சொன்னேன்பாரே. (24)

கெவுரிப்பற்பம்.

சொன்னதொரு கெவுரியுட பற்பங்கேளு
சூட்சமாய வுரிதனில் முன்போற் காய்ச்சி
வண்மையாய் மருந்துதனைக் கவசஞ்செய்து
வைத்திடுவாய் வாழையுட சாம்பற்குள்ளே
பின்னமில்லை மஞ்சள்நிறக் கெவுரிதானும்
பிசகாமல் வெள்ளைநிறம் பேணிப்பாரு
கன்னமுடன் பவுத்திரங்கள் மூலரோகம்
காணாதே போய்விடுமே கண்டுபாரே. (25)

குன்மத்திற்கு.

காட்டாதே யாக்கோபு வென்பேராகும்
கண்மணியே உப்பதனைக் கழறக்கேண்மோ
தாட்டிகமாய்க் குன்மமென்ற ரோகமெல்லாம்
தளரவே சோதனுப்பு யுக்துப்போடு
வாட்டமின்றி வளையலுப்புச் சரியுப்பையா
வளமான பொட்டிலுப்பு நவசாரந்தான்
நாட்டமுட னுழமண்ணு சாரக்கெல்லாந்தான்
நாயகமே யோரிடையாய் நிறுத்துக்கொள்ளே. (86)

கொள்ளவே லிம்பழத்தின் சாற்றாலாட்டிக்
கொற்றவனே பதிலெருவிற் புடந்தான்போடு
தள்ளவே கையானின் சாறிலொன்று
தண்கலையுடன் மேனிச்சா றதனிலொன்று
கள்ளமின்றிப் பிரண்டைச்சா றதனிலொன்று
கருத்தாகக் கெச்சங்கா யதனிலொன்று
வள்ளமேலே புடம்போட்டு எடுத்துமைந்தா
வாகாகத் தேன்விட்டு ஆட்டிக்கேளே. (87)

கேளடா மெழுகதுபோ லாட்டிமைந்தா
செடியான சுண்டைக்காய் விதங்கொள்ள
நாளடா போக்காது பத்துநாளில்
நாடாது குன்மமென்ற ரோகமெல்லாம்
வாளடா இம்மருந்து போலேயுண்டோ
வளமான ரம்பமடா குன்மத்துக்கு
பாளடா என்குருநான் சொன்னமார்க்கம்
பாருலகிற் பொய்யாது மெய்யதாமே. (88)

மெய்யான இருவிரலை வைத்துப்பார்பார்
மேன்மையுள்ளாய் ஆத்தாளின் கிருபைவேண்டும்
பொய்யாக ஞானமென்ற மார்க்கமையா
புண்ணியனே நீபொருந்த வெல்லாஞ்சித்தி
கையாத மாந்தருக்கு உய்யாதையா
காடதனில் முனியாரவாய் சித்தருவாய்
கைதவமாய் ஆத்தாளின் ருளைவேண்டிக்
கண்மணியே அந்தரங்க பூசைபண்ணே. (89)

மெய்ஞ்ஞானி.

கண்மணியே யவர்களிட மேமாறுதே
கண்டுன்னை யடைந்தக்கால் ஞானமாய்நில்
விண்மணியே மெய்ஞ்ஞானி வருவாருண்டு
விள்ளும்வன் வரும்போது மகிமைதன்னை
மண்ணிலே பட்டமாக் தளிர்த்துப்போகும்
மகத்தான ப்ரமநிலை கண்டமேலாம்
பண்ணவர்கள் கூறவொண்ணு மகிமையப்பா
பார்த்திபனே யவர்தேக மின்னுந்தானே. (126)

மின்னுமே பித்தரைப்போல் திரிவாரப்பா
மேதினியில் நின்னோடே பேசார்பாரு
பன்னுமேன் நீபடுத்தால் கல்லினாலே
பாச்சுவ ருன்மேலே பித்தரைப்போல்
உன்னுவாய்க் கருவாளி யானால்நீயும்
உகந்துகொள்வா யவர்மகிமை தன்னையப்பா
இன்னிலகதில் சருவாளி காண்பானல்லால்
இணகசமில்லாக் கருமியவர் காணார்பாரே. (127)

காணுமே தன்னிலையில் நிற்பாரையா
கண்மணியே யவரைக்கண்டால் விட்டிடாதே
தோணுமே மாய்கையினால் மறைந்துகாண்பார்
முதல்நூலில் திலகமிட்டுக் கண்டுகொள்ளு
ஊணான வூணுறக்க மற்றஞானி
உத்தமனே யவர்பதத்தைத் தொண்டுபண்ணி
காணுமற் கதிபெறவே வழிபைக்கேட்டால்
கவினுவார் மனமுவந்து காதர்தாமே. (128)

மறைப்புமை.

தாமடா மறைப்புமை சொல்லக்கேளு
தகலமயுள்ள யென்சிஷா தயவுள்ளானே
காமடா நிழல்வணங்கத் திசைப்பூடப்பா
நலையுள்ள சுழற்பூச்சி தொட்டால்வாடி
ஆமடா பெம்மரசங் காசியோடு
அப்பனே பேய்மிரட்டி நாய்வணங்கி
பாமடா கருப்பூனைக் கண்ணும்பித்தும்
பருந்தினுட பித்தோடு ஆந்தைப்பித்தும்
காமடா காடையுட பித்துங்கூட்டு
கண்மணியே செம்போத்துப் பித்துங்கூட்டே. (129)

புட்மதுதான் போட்டபின் பெடுத்துப்பாரு
புதுமைபடா வப்ரேகச் செந்தூரந்தான்
தடமான செந்தூரங் குங்குமப்பூ
தாரணியில் வாதத்துக் குறுதியாகும்
வடமான சிவபூசை மறந்திடாதே
மானிலத்தி லின்னமுண்டு சிடிகைவேதை
இடமான யிடம்பொருளே வல்தான்வேண்டும்
இஷ்டமுள்ளோய் வாதமெல்லாங் கொட்டினேனே. (154)

கொட்டினேன் மூலிகையைக் காணுதற்குக்
கோடிப்பாய் சொர்ணவயி ரவரின்பூசை
இட்டமுடன் பூசிக்க மூலியெல்லாம்
இதுஇதுவென் றறைவாரே வயிரமூர்த்தி
கட்டமது படவேண்டாங் கருத்தாயப்பா
கழறுவே ணிவரைவிட்டா லாசான்வேண்டும்
மட்டிபிடஞ் சேராதே மைந்தாசொன்னேன்
மகாகோடி வித்தையெல்லாங் கொட்டினேனே. (155

வித்தையிது வொருவருக்குங் காட்டிடாதே
விண்மணியே கண்மணியே விளம்பக்கேண்மோ
பத்தியுடன் நூலதனைப் பதனம்பண்ணு
பகராதே கருமியென்ற மாண்பருக்கு
எத்தனையோ நூல்சொன்னார் சித்தரெல்லாம்
என்னூற்போல் திறமாகச் சொல்லவில்லை
நத்துவா யம்பாளின் றூளையப்பா
நாதாந்தப் பேரொளியை நண்ணுவாயே. (156)

நண்ணுவா யடைந்தவரைக் காக்கவேண்டும்
நாடதனில் பொய்சொல்லா திருக்கவேண்டும்
எண்ணிவா யுலகெல்லாந் தன்னைப்போல
ஏழையைநீ காத்திடுவா யிணக்கமாக
விண்ணுலகோர் யாவருமே மெச்சுவார்கள்
வேதாந்தத் தாயினது அருளினாலே
கண்ணியமா யுலகினிலே புண்பவானுய்க்
கலக்கமற்றுத் திரிவாய்நீ யின்னுங்கேளே. (157)

ஆடவே யாரறிந்து செய்யப்போரூர்
அப்பனே சிவயோகி செய்வான்பாரு
நீடவே யோகிக்குக் கிட்டுமெல்லால்
நீணிலத்தில் சமுசாரிக் கெய்யாதய்யா
வாடவே திரிகின்ற பேயருக்கு
வகையான யிவ்வேதை கிட்டாதப்பா
ஆடவே முன்சொன்ன வேதையெல்லாம்
அப்பனே சமுசாரிக் கெய்யும்பாரே. (222)

பாரேநீ வேதையிலே தங்கஞ்சேர்த்தால்
பாலகனே யவ்வேதைக் கிட்டுமையா
சீரேதான் தாயில்லாப் பிள்ளையுண்டோ
செகத்திலே செப்பார்க ளிம்மறைப்பை
தேரேதான் வயதுபத் தரைக்குமேலே
தெளியாது சமுசாரி யானபேர்க்கு
சாரேநீ சொல்லுகிறேன் சிடிகைவேதை
சாங்கமுடன் தாய்சேரு மேமந்தானே. (223)

உப்புமணிச்சேந்தூரம்

ஏகமாம் உப்புமணிச் செந்தூரங்கேள்
எழிலான ஆவாரம் பூவரைத்து
தாமதமில் லாமலே ரெண்டுபாத்திரம்
தயவாகத் தான்செய்து கரியுப்புவைத்து
நேமமாய்த் தான்மூடிச் சீலைசெய்து
நேர்மையுடன் புடமதுவே நூற்றியெட்டு
வாமமாய் ஐந்தெருவிற் புடந்தான்போடு
வப்பனே மறுபுடந்தான் சொல்லக்கேளே. (224)

சொல்லுவேன் ஆறெருவிற் புடந்தான்போடு
சோராமல் புடத்துக்கு பெருவொன்றேத்து
வெல்லுவா யிப்படியே நூற்றியெட்டு
விளம்பியதோ ரெருவரையி லேத்திப்போடு
கல்லவே செந்தூரம் பவளம்போலாம்
கருவான தாம்பரத்தின் மீதேதாக்கு
நல்லவே பத்துக்கு குருவொன்றீய்ந்து
நலமான தங்கமது ஒன்றாமேசேரே. (225)

அறைந்திட்டே னிந்தநூ லதீதமப்பா
ஆசறியப் போரார்க ளவனியுள்ளே
திறந்திட்டே னுலகோர்க்கு வெளியதாக
திவ்வியதச தீட்சையெல்லாந் தெரியநன்றாய்
சொறிந்திட்டேன் வாடாத புஷ்பமாக
சொர்னரூப வறிவுடைய பிள்ளைகட்காய்
வறைந்திட்டேன் வொளித்ததெல்லாம் வெளியதாக
வாதிவயித் தியர்கண்டால் வாழ்த்தும்நூலே. (298)

நூலேணி யிதுவல்லோ போவதற்கு
நுணுக்கமதாய்க் காலைவைத்து நுழைந்துயேறு
காலேணி சோலையிலே வைத்தேனப்பா
கண்டேரு அண்டம்ரெண்டுங் கொண்டுபோகும்
மேலேணி முப்பாலுக் கப்பாலப்பா
மெய்ஞ்ஞானி யப்பாலுக் கப்பால்நிற்பார்
பாலேணி சித்தருக்கும் ஞானிக்காகும்
பாடினேன் குருவாக யின்னூல்தானே. (299)

அதீதமயம் 32 கூறல்

தானேதா னறிவதற்கு வகையைக்கேளு
தட்டிவிடு யான்சொன்ன மார்க்கம்போல
நானேதா னியம்பிவிட்டேன் மார்க்கமாக
நாட்டப்பா வுன்மனதை சிவத்திநோடு
மானென்ற அதீதமயமுப்பத்தி ரண்டிற்கும்
மகிழ்வாக அதின்விபர சூட்சந்தன்னை
வானோர்க ளறிவார்க ளெந்தநூலை
வழங்குகிறே னுந்நனுக்கா யாதிபோற்றே. (300)

ஆதிபாஞ் சோதியா யமர்ந்தாளம்பாள்
அரகரா வம்பாளை போற்றிச்செய்து
சோதிபரம் பரையான சொரூபத்தாயை
ஜொலிக்குகின்ற ரூபியைத்தான் தொழுதுபோற்றி
நீதிபாம் பரையான மணியைக்கேளு
நீனிலத்தில் சாத்திரத்தில் மறைத்ததெல்லாம்
சேதிபரம் பரையாக நிலைக்கச்சொல்வாள்
திறமாகத் தேவிக்குக் காப்புக்கட்டே. (301)

காப்பிட்டுக் கர்த்தரைத்தான் தொழுதுபோற்றி
கனசசபை யுடையோரை நமஸ்கரித்து
கூப்பிட்டு வுலகோர்கள் பிரமைதீர
கூறுவேன் உபதேச சூட்சந்தன்னை
சாப்பிட்டு யிளைப்பாரி யிருங்களென்று
சமுசயங்கள் தீ நன்றாய் சாற்றுவேன்கேள்
ஆப்பிட்ட தென்றுசொல்லி துள்ளவேண்டாம்
அடுக்கடுக்காய் விவரமெல்லா மறைகுவேனே. (302)

அரைகிறே னுதிமுத லகாரந்தன்னை
அப்பனே அகாரமது சிவமதாச்சு
வரைகிறேன் தீமூல மப்பூவாச்சு
மகாபெரிய சூகரச மொன்றுமாச்சு
நிரைகிறேன் வாசிக்கு வங்காரமாச்சு
நிசங்கண்டு போவதற்கு ஆதிகற்பம்
சொரிகிறேன் தீக்ஷைக்குமுதல் நந்தியாச்சு
சொர்னசுய நபிமாரே சொக்கிக்கேளே. (303)

சொக்கிமிகப் பார்த்தோர்க்கு முதலெழுத்துமாச்சு
சொல்லவொண்ணு முதல்மூல மிதுவேயாச்சு
நெக்கிமிக அகாரதீக்ஷை செய்தபேர்க்கு
நிலைகண்டால் முதல்பாமூ மென்றுமாச்சு
வெக்கிமிகப் போவார்கள் சமையத்தோர்கள்
வெளியாக யிதிலொன்றை கேட்டபோது
புக்கிமிக ஜெனனத்தில் வுழல்வார்மாண்பர்
புண்ணியனே ரேசிக்கும் பொருள்தானுச்சே. (304)

பொருளான வெண்சாரை யாகிப்போச்சு
பொய்யில்லாத கருஞ்சாரை யதிலேயாச்சு
அருளான பொருள்கண்டால் சாரமாச்சு
அப்பனே சாகக்கா லிதுவேயாச்சு
சுருளான மச்சேந்திர மாகிப்போச்சு
சுழல்காற்று யிதுவாச்சு வாய்வாய்போச்சு
இருளான மருளர்சொல்லை கேட்டுமைந்தா
இயங்காதே மயங்காதே இன்னங்கேளே. (305)

சொல்லுகிறேன் செந்தூரம் பத்துக்கொன்று
சொகுசாக மதிமேலே யீய்ந்துபாரு
வெல்லுவாய் வயததுவு மொன்பதாகும்
வேகமடா செந்தூரப் போக்குகண்டாய்
கல்லவித்தை யிவ்வேலை கைவிடாதே
நாடதனில் கிடைக்காது யிந்தப்போக்கு
வல்லமையா யாடிப்பார் சொன்னதெல்லாம்
வகையறியா மூடருக்கு யெய்தாதென்னே. (350)

எய்யாது யின்னமொரு போக்குசொல்வேன்
யெழிலான ரசிதமது வித்தைகேளு
பொய்யாத குருபரனுர் சொன்னவாக்கு
பூவிலகி லுக்தனுக்காய் யியம்புவேன்பார்
மெய்யாகத் தாம்பரத்தை வுருக்கிநீதான்
மேன்மையுள்ளாய் வெட்பூண்டின் சாறில்தேய்த்து
கைதவமாய் வேழுவிசை யுருக்கிச்சாய்க்க
கண்மணியே தாம்பரந்தான் வெளுத்துப்போமே. (351)

போமடா வதின்பிறகு சொல்லக்கேளு
புகழான வயதுபதி னுறதாகும்
தாமடா வங்கபற்பஞ் சொல்லக்கேளு
தயவான வார்பூண்டை வரைத்துநன்ருய்
வாமடா வங்கத்திற் கவசஞ்செய்து
வகையாகப் பத்தெருவில் புடந்தான்போடு
காமடா யியம்பியதோர் வங்கந்தானும்
நாயகனே திருநீருய் நீறிப்போமே. (352)

நீறிப்போம் பற்பமது பத்துக்கொன்று
நிலையாகத் தாம்பரத்துக் கீய்ந்துபாரு
வீறியனே செம்பதுதான் சுத்தியாச்சு
வீணிலே போக்காமல் நாலுக்கொன்று
காரியமாய்த் தங்கமது சேர்த்துப்பாரு
கண்மணியே வயதுவே மொன்பதாகும்
காரியர்பால் போகாதே தர்மஞ்செய்து
நன்ருகச் சாஸ்திரத்தை யாய்ந்துபாரே. (353)

பாரேநீ சீவனத்தை செய்துகொண்டு
பண்பாக வெந்தனுட னூலைப்பாரு
சீரேநீ யொருவருக்குங் காட்டாதப்பா
சிற்பரனுந் தற்பரனைத் தியானம்பண்ணு
ஊரேநீ திரியாதே யுற்றுப்பாரு
ஓகோகோ அம்பாளி னட்டம்பாரு
தாரேநீ கண்மணியே பதியிற்சொக்கு
கருத்தாக நாதவிந்தைக் கண்டிடாயே. (354)

கண்டிடா யின்னமொரு கருவைச்சொல்வேன்
கழருதே செம்பினுட சுத்திகேளு
விண்டுபார் செம்பதுவைத் தகடதாக்கி
விண்மணியே உத்தாமணி யிலையரைத்து
சண்டமா ருதம்போல கவசஞ்செய்து
சாங்கமுடன பத்தெருவில் புடந்தான்ரெண்டு
கண்டபடி மேனியிலைப் புடமிரண்டு
காட்டாதே ஊமத்தைப் புடமொன்றுச்சே. (355)

புடமதுதான் தீர்த்தபின்பு குருசெம்பாச்சு
புண்ணியனே தங்கமது நாலுக்கொன்று
நடம்போலச் சேர்த்துப்பார் வயதேழாச்சு
தாரணியி லிவ்வேதை வெகுசுருக்கு
வடமான கசடருக்கு காட்டொணாது
வாகாகச் சீவனத்தை செய்துகொண்டு
மடமான ஸ்தம்பத்தை நோக்கிப்பாரு
மைந்தனே வாதமது சிக்கும்பாரே. (356)

சிக்குந்தா னின்னமொரு போக்குச்சொல்வேன்
சேயெம்மை யண்டியநால் செவ்வையாக
ஒக்குந்தான் கவுதும்பைத் தூண்டிமூலி
ஓகோகோ வரைத்துநன்றாய் தங்கத்திற்கு
புக்கியே கவசித்துப் புடமேயொன்று
போட்டுவெடு திருநீறாய் நீறிப்போகும்
தக்கபடி சொன்னேனே யுந்தனுக்காய்
தயங்காதே வசிகரத்தின்குணத்தைக்கேளே. (357)

சத்தான வயித்தியம்பன் னிருநூருகத்
தான்சொன்னே னுந்தனுக்கு வெளியதாக
முத்தான வயித்தியசிந்தா மணியேழ்நூறும்
முறையாகக் குருநூலம் பதுவுஞ்சொன்னேன்
சித்தானவயித்தியம் நானூரும் சொல்லிச்
சிறப்பாகக் கைபாக முழுதஞ்சொன்னேன்
வித்தான வயித்தியமுன் னூறுஞ்சொல்லி
விளங்கவே சூஸ்திரமுப் பதுஞ்சொன்னேன். (378)

சொன்னதுவு மிதுவரையோர் கோர்வையாகும்
சுகமாக வாதவித்தை தெரிவதற்கு
நன்னயமாய்க் களங்குமுன் னூறுசொன்னேன்
நலமான பஞ்சமித்திரம் மூன்றுநூரும்
பின்னமிலாச் செந்தூர மூன்றுநூரும்
பேணியே நூத்தியன் பதுவுஞ்சொன்னேன்
கன்னல்போ லதைக்குறுக்கி அன்பதுந்தான்
கழரினேன் நாதாக்கள் மெச்சத்தானே (379)

மெச்சுகின்ற இடைபாகம் பதினூருகும்
விதவிதமாய்ச் செய்பாகம் பதினூறுந்தான்
அச்சமின்றிச் சொல்வே னிதுவோர்கோவை
யாகவே சொன்னபின்பு சுண்ணஞ்செய்ய
பச்சமுடன் அறுநூறு சுண்ணக்காண்டம்
பகர்ந்துமே அதைகுறுக்கிச் சுருக்கமாக
இச்சையுடன் சுண்ணமுன் னூறுஞ்சொன்னேன்
இயல்பாக இன்னமுந்தான் சொல்லுவேனே (380)

சொல்லினேன் சுண்ணமுன் னூறைச்சுருக்கி
சூஸ்திரமாய் நூற்றியம்பதுவுஞ் சொன்னேன்
வல்லமையா யதன்சூஸ்திர மைம்பதுவும்
வகையாக தண்டகமும் நூறுஞ்சொன்னேன்
நல்லதொரு சாஸ்திரங்க ளாருஞ்சேரில்
நலமாகக் கோர்வைநூ லாகும்பாரு
மெல்லவே யென்னூலைக் கோர்வைசெய்து
வேண்டியே பார்த்தோர்க்குப் பொன்னும்பாரே (381)

இன்னமுந்தான் சொல்லுகிறேன் விபரமாக
இனிமையுடன் சதுரகிரி தன்னிலப்பா
தன்னமையாய் முனிசித்தர் வெகுபேரப்பா
தனித்தனியே குகையினிலே யிருக்கிறார்கள்
நன்னயமாய் விசேடநாள் யெல்லோருந்தான்
நலமாகச் சேருவர்கள் அன்னால்தன்னில்
கன்னல்போல க்யிலாசர் திருநூலைத்தான்
கையிலெடுத் தெல்லோர்க்குங் காட்டினாரே (402)

எல்லோருஞ் சதுரகிரி தன்னிலப்பா
இனிமையுட னிருக்கிறதோர் விபரங்கேளு
வல்லதொரு சதுரகிரி தன்னிலேதான்
மகிமைமெத்த சஞ்சீவி மலைதானுண்டு
நல்லதொரு பச்சிலைக ளனேகமுண்டு
நன்மையுடன் வசிப்பதற்குக் குகைகளுண்டு
மெல்லவே கற்பமுண்ண இடந்தானுண்டு
மேலான சித்தர்களும் வசிப்பார்பாரே (403)

பாரப்பா திருமூலர் கிழித்த நூலை
பக்குவமாய்ப் புரக்கியதை யொன்றுசேர்த்து
நேரப்பா அநேகநூல் சொல்லிவிட்டேன்
நேர்மையுடன் கண்டறிந்தால் வெளியாய்த்தோணும்
சீரப்பா யென்னூலைக் கோர்வையாக
செம்மையுடன் பார்த்தோர்க்குச் செயமேகிட்டும்
காரப்பா நபிமார்கள் பாதம்போற்று
கருத்தாக நானூறு முற்றும்பாரே (404)

யாகோபு வைத்திய வாதசூஸ்திரம் சா.

முற்றிற்று.